# குழித்துறை நகர்மன்றத்தின் 15-09-202 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) நமது தாய் நாட்டிற்காக சேவை செய்து ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களின் சேவையை பாராட்டும் விதமாக அவர்களின் வீடுகளுக்கு வீட்டுவரி மற்றும் தண்ணீர் வரி ரத்து செய்ய தமிழக அரசை கேட்டு தீர்மானம் நிறைவேற்றலாம்.

மன்றத்தீர்மான எண். 232 தீர்மானிக்கப்பட்டது.

## நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்

1) நகராட்சி வளாகத்தில் தேநீர் கடை (Tea Stall) அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 233 (1) தீர்மானிக்கப்பட்டது

2) மெயின் ரோட்டிலிருந்து மேலே காட்டுவிளை செல்லும் சாலையில் மின்கம்ப எண்.65-ல் குழல் விளக்கு போடவும், திரித்துவபுரத்தில் ஜேம்ஸ் அவர்களின் வீட்டின் முன் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு குழல் விளக்கு போடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 233 (2) தீர்மானிக்கப்பட்டது

## 9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை - மடிச்சல் சாலை, குழித்துறை - விளவங்கோடு சாலை, குழித்துறை சந்திப்பிலிருந்து ஜோஸ்கோ பர்னிச்சர் வரையிலான தேசிய நெடுஞ்சாலை, ஜோஸ்கோ பர்னிச்சர் அருகாமையிலிருந்து திரு. கிருஷ்ணன் நாயர் வீடு வரையிலான சாலை, மேலே சாணிவிளை சாலை ஆகிய சாலை ஓரங்களில் தேவையான மின்கம்பங்கள் நிறுத்தியும், தேவையான தெருவிளக்குகள் போடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 234 தீர்மானிக்கப்பட்டது

12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கி.செ. ஜீலியட் மெர்லின் ரூத் கொண்டு வரும் தீர்மானம்

1) BOC தெருவில் ஏற்கனவே இருக்கும் குழாயில் வரும் தண்ணீர் அப்பகுதி மக்களுக்கு தட்டுப்பாடாக உள்ள காரணத்தால் புது பைப் லைன் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (1) தீர்மானிக்கப்பட்டது

2) சிங்கிளேயர் தெருவில் திரு. அப்பு ஜாண்சன் வீட்டு முன்புறம் சாக்கடை தண்ணீர் சாலையில் வடிந்து சுகாதார கேடு ஏற்படுவதால் ஓடை அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (2) தீர்மானிக்கப்பட்டது

3) தெங்கன்குழிவிளையில் திருமதி. எமிலி வீட்டு அருகில் உள்ள சாலையில் ஓடை இல்லாத காரணத்தால் கழிவுநீர் திரு. குமார் என்பவரின் காம்பவுண்டிற்குள் வடிந்து துர்நாற்றம் ஏற்படுகிறது. எனவே மேற்படி இடத்தில் ஓடை அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (3) தீர்மானிக்கப்பட்டது

4) சி.எஸ்.ஐ.மிஷன் மருத்துவமனை எதிர்புறம் சாலை ஒரத்தில் பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளை சந்திக்கும் பொருட்டு சிறுமின் விசை நீர்தேக்க தொட்டி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (4) தீர்மானிக்கப்பட்டது

5) திட்டவிளை சாலை உடைந்து / பழுதடைந்துள்ளது. அதனை ஏற்கனவே இருந்தது போல் கான்கிரீட் சாலையாக அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (5) தீர்மானிக்கப்பட்டது

6) அனைத்து நகராட்சி சாலைகளிலும் ஓடைகளை மறைத்து / அடைத்து வைக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (6) தீர்மானிக்கப்பட்டது

7) தெங்கன்குழிவிளை திரு. சுந்தர்ராஜ்(சுந்தர்) வீட்டு முன் இருக்கும் மின் கம்பத்தில் மின் விளக்கு பொருத்தி தருமாறு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (7) தீர்மானிக்கப்பட்டது

8) தெங்கன்குழிவிளை திருமதி. வேளாங்கண்ணி வீட்டு முன் இருக்கும் மின் கம்பத்தில் மின் விளக்கு பொருத்தி தருமாறு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (8) தீர்மானிக்கப்பட்டது

9) ஆண்கள் உயர்நிலை பள்ளியின் பின்புறம் உள்ள தண்ணீர் tank. பழுதடைந்துள்ளது. அதனை சரி செய்து தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (9) தீர்மானிக்கப்பட்டது

10) கண்ணக்கோடு பழைய ரேஷன் கடை அருகில் உள்ள ஒடை (தண்ணீர் tank அருகில்) பழுதடைந்து ள்ளது. அதனை சரி செய்து தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (10) தீர்மானிக்கப்பட்டது

11) அடிக்கட்டு விளையில் செய்யது அலி வீட்டின் அருகாமையில் இரண்டு மின் கம்பிகளுக்கு இடையேயான தூரம் அதிகமாக உள்ளது. அதனால் உயர் அழுத்த மின்கம்பி தாழ்ந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே ஒரு மின் கம்பம் இடையில் நாட்டி தாழ்ந்து கிடக்கும் மின்கம்பியை சரி செய்து தருமாறு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (11) தீர்மானிக்கப்பட்டது

12) மெயின்ரோடு எட்வர்ட் வீட்டு முன்பு (பழைய ஏர்செல் அலுவலகம் அருகில்) உள்ள பைப் லைன் பழுதடைந்துள்ளது. அதனை மாற்றித்தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (12) தீர்மானிக்கப்பட்டது

13) பழுதடைந்துள்ள திட்டவிளை சாலை சீரமைத்து தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (13) தீர்மானிக்கப்பட்டது

14) Sinclaire தெரு திரு. அப்பு ஜாண்சன் வீட்டு அருகில் உள்ள சாலை பழுதடைந்துள்ளது. அதனை சீரமைத்து தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (14) தீர்மானிக்கப்பட்டது

15) Sinclaire தெரு திரு. அம்புரோஸ் வீட்டு அருகில் உள்ள சாலை பழுதடைந்துள்ளது. அதனை சீரமைத்து தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 235 (15) தீர்மானிக்கப்பட்டது

<u>16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) உரகிடங்கின் மையப்பகுதியில் எல்லா பகுதிகளிலும் மின்விளக்கு தெரியும் விதத்தில் ஒரு உயர்கோபுர மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 236 (1) தீர்மானிக்கப்பட்டது

2) கழிவுநீர் ஒடைகள் அடைக்க அரசின் உத்தரவுபடி நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிகாரிகள் அரசிற்கு களநிலவரம் பற்றி எடுத்து சொல்ல வேண்டும். பூமியில் பல இடங்கள் 3 அல்லது 4 அடிக்குள் தண்ணீர் ஊற்று ஏற்படுகிறது. இதனால் கழிவுநீர் தேங்கும் அளவு குழி தோண்ட முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் தமிழக அரசிற்கு கீழ்மட்டம் இருக்கும் களநிலவரத்தை தெரிவித்து அரசின் விதிமுறைகளின் விலக்கு பெற முயற்சி எடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 236 (2) தீர்மானிக்கப்பட்டது

3) குழித்துறை நகராட்சியில் உரக்கிடங்கில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் அருகில் உள்ள 3 ஏக்கர் நிலத்தை நில ஆர்ஜிதம் மூலம் R.S.No.D7/57 சுற்றியுள்ள பகுதிகளை கையகப்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 236 (3) தீர்மானிக்கப்பட்டது

21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்

1) சிறியகாட்டுவிளையில் திரு. முருகன் வீடு முதல் திரு. பத்றோஸ் வீடு வரை உள்ள பாதையை பேவர் பிளாக் அமைத்துதர மன்ற தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 237 தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 1

இந்திய இராணுவ ஆட்சேர்ப்பு முகாம் 21-08-2022 முதல் 01-09-2022 வரையில் நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கில் நடைபெற உள்ளதால் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை . G2/22839/2022, நாள் 12-08-2022-ன்படி இந்நகராட்சியின் பங்குத்தொகையாக ரூ.2,00,000/- வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- அடிப்படை வசதிகள், அரண், மின்வசதி, மருத்துவ வசதி, பந்தல், கணினி, பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திட வேண்டியுள்ளதால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.3204/2022/சி1.

மன்றத்தீர்மான எண். 238 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 2

சட்டமன்ற முறையீட்டு குழுவிற்கு அனுப்பப்பட்ட மனுக்கள் மீது ஆய்வு மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வருகை புரிந்த குழுவினருக்கு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை O1/17132/2022, நாள் 12-05-2022-ன்படி வாகன வசதி ஏற்படுத்திய வகைக்கு “MESSIAH CABS” எனும் நிறுவனத்திற்கு செலவினப்பட்டியல் ரூ.14,687/-ஐ வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- 1) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 17-05-2022 மற்றும் 18-05-2022 ஆகிய இருநாட்கள் வாகன வாடகை, எரிபொருள் செலவினம் மற்றும் ஒட்டுநர் சம்பளத்தொகை ரூ.14,687/- ஆகியவற்றை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.3188/2022/சி1.

மன்றத்தீர்மான எண். 239 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நகர புல எண்.A3-64-ல் உள்ள 1260 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் விவசாய பகுதியிலும் A3-64-ல் உள்ள 271 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் வணிகப்பகுதியிலும் உள்ளதினை நிறுவனப்பகுதியாக நில பயன்மாற்றம் கோரிய Dr. ஷீபா ஜெயலால் குழித்துறை என்பவரது விண்ணப்பத்தின் பேரில் மேற்படி நில பயன்மாற்றம் தொடர்பாக, பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் எழுத்து பூர்வமாக 30 தினங்களுக்குள் இந்நகராட்சிக்கு தெரியப்படுத்துமாறு அறிவித்து Afternoon English daily மற்றும் தினத்தந்தி நாளிதழில் 16-06-2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. 30 தினங்கள் கடந்த நிலையில் இந்நாள் வரை எழுத்து பூர்வமாக ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே ஆட்சேபனைகள் ஏதும் இல்லை எனக்கருதி மேல் நடவடிக்கைக்காக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாகர்கோவில் அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1233/2022/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண். 240 ஒத்திவைக்கப்படுகிறது

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சி அலுவலகம் உள் மற்றும் வெளிப்பகுதியில் வர்ணம் பூசவும் பராமரிப்பு பணி மேற்கொள்கொள்ளவும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.205, நாள் 04-08-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 12-08-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.P. பிரேம்குமார் மதிப்பீட்டை விட 0.20% குறைவு
2) திரு.A. ஆன்றனி மதிப்பீட்டை விட 8.96% அதிகம்

இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20% குறைவாக கொடுத்துள்ள திரு.P. பிரேம்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.P. பிரேம்குமார் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3088/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 241 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சி VLC மைதானம் மற்றும் வெட்டுமணி சப்பாத்து மோட்டார் அறை அருகில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அமைப்பை பராமரித்தல் பணி மேற்கொள்ள ரூ.75,000/- மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.221, நாள் 04-08-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 12-08-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.S. பாபு — மதிப்பீட்டை விட 0.07% குறைவு
2) திரு.C. சுரேஷ் — மதிப்பீட்டை விட 0.61% அதிகம்

இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக வழங்கிய திரு.S. பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3040/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 242 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.6-ல் அமைந்துள்ள வேலுத்தம்பி திடலில் 75-வது சுந்திர தினவிழாவினை முன்னிட்டு சுதந்திர சின்னம் அமைக்க ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.228, நாள் 04-08-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 12-08-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.A. ஆன்றனி — மதிப்பீட்டு விலை விகிதம்
2) திரு.P. பிரேம்குமார் — 1.78% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்

இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு வழங்கிய திரு.A. ஆன்றனி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று திரு.A. ஆன்றனி என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3165/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 243 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியிலுள்ள தினசரி காய்கறி சந்தையை இடித்து அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக காய்கறி சந்தை கட்டுவதற்கென கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.423.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்க்கண்ட பணிகளுக்கான வடிவமைப்பு நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி அவர்களின் ஆய்வின் போது புதியதாக வடிவமைப்பிற்கு நிர்வாக அனுமதி பெற்று தருமாறு கோரப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கலந்து ஆலோசித்து திருத்திய வடிவமைப்பில் பிரேரணை மீள சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் Reform Design & Planning Cell Pvt. Ltd Gujarat அவர்களிடம் ஒப்படைத்து திருத்திய பிரேரணை தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனத்திடம் பணியை மேற்கொள்ள ஆலோசனை கட்டணம் நிர்வாக அனுமதி தொகையில் 1% வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று Reform Design & Planning Cell Pvt. Ltd Gujart என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். /2022/இ1.

மன்றத்தீர்மான எண். 244 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் ஆர்.சி.தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான படிப்பகத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.65,000/- மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.33, நாள் 31-03-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 05-05-2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.சி. ராஜன் என்பவருக்கு நகர்மன்ற தீர்மான எண்.109, நாள் 20-05-2022-ன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்ட போது நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கூடுதலாக பயனாளிகள் அமரும் வசதி மற்றும் மின்சார வசதி செய்யப்பட்டதின்பேரில் கூடுதலாக செலவு தொகை ரூ.11,252/- வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பணிக்கான வரப்பெற்றுள்ள கூடுதல் செலவினத்தை வருவாய் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**869/2022/**இ**1

.மன்றத்தீர்மான எண். 245 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்பம்மம் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Bio-mining process மூலம் அப்புறப்படுத்துவதற்கான பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் மாநில அளவில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு MC & Communications Private Limited நிறுவனத்திடம் இருந்து பட்டியல் தொகை ரூ.29,400/- வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**1230/2018/**இ**1.

மன்றத்தீர்மான எண். 246 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் அமைந்துள்ள குழித்துறை பஸ் நிறுத்தத்தின் அருகில் உள்ள பொதுக்கழிப்பிடம் சீரமைக்கும் பணிக்கு ரூ.3.42 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.82, நாள் 29-04-2022-ன்படி அனுமதி பெற்று 08-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.சி. ராஜன் — மதிப்பீட்டை விட 0.21% குறைவு
2) திரு.பி. ஜெயசந்திரன் — மதிப்பீட்டை விட 5.06% அதிகம்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.சி. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.சி. ராஜன் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்.**1242/2022/**இ**1.

மன்றத்தீர்மான எண். 247 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.11</u>

இந்நகராட்சி நகரளவை பிரிவில் Park Notification தொடர்பாக Plan தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பித்த வகையில் ரூ.2250/- மற்றும் Street Vendors DIP தயார் செய்த வகையில் ரூ.9440/-ம் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.11,690/-ஐ நகரமைப்பு ஆய்வாளருக்கு வழங்கிடவும், உயர்மட்ட குழு தணிக்கைக்காக பதிலறிக்கைகள் தயார் செய்து நகல் எடுத்து Spiral Binding செய்த வகைக்கு ரூ.6128/- நகராட்சி உதவியாளர் திரு.S. முருகன் என்பவருக்கு வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- அத்தியாவசிய பணிகளுக்காக செலவுகள் மேற்கொண்டுள்ளதால் நகராட்சி பணியாளர்களுக்கு செலவினத்தொகை வழங்கலாம்.
ந.க.எண்.326/2022/H1.

மன்றத்தீர்மான எண். 248 அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/-திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.